CHENNAI KONGU NANBARGAL MALAR

சென்னை

# கொங்கு

நண்பர்கள் மலர்


ஏர் 10 • உழவு 9 • திருவள்ளுர் ஆண்டு 2056 • விலை ரூ.20/- • செப்டம்பர் 2025 • (ஆவணி-புரட்டாசி)



## மீண்டும் தமிழ்நாட்டிலிருந்து....




AMMA NAANA




**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
**Ph: +91 94443 99199**

**M. Senthilraj**
CEO
**Ph: +91 94443 99998**

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

**No.100, Chamiers Road,**
**Teynampet,**
**Chennai - 600 018.**

**+91 98843 09993**


**ammanaana.staff@gmail.com**

# உள்ளடக்கங்கள்...


**17** சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

**22** அட்டைப்பட செய்தி

**20** உழைப்பை விதையுங்கள்


**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600014.
**Printed by:**
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.


## கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

### நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**வீ.க.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**

**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**

**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

### செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

**Dr.சண்முகப்பிரியா** MBBS
AGS Complex & Ware Houses,
7824880456

**தணிக்கையாளர் R.பாலசந்திரன் CA**


பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.


ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம் நலம் நலம் பல விழைகிறேன்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

கல்வி அதிகாரத்தில் வரும் இக்குறளுக்கு,

பிறர் மகிழுமாறு அவர்களோடு கூடியிருந்து பின்னர் இவரை எப்போது காண்போம் என்று நினைக்குமாறு பிரிதலே கற்றிந்தாரது செயலாகும் என்று பொருளுரைத்திருக்கிறார் பேராசிரியர் மாணிக்கம்.

புலவர் பெருமக்கள் கற்றறிந்த சபையில் கூடி மகிழ்ந்து அளவளாவி விட்டு பிரிந்து செல்லும் பொழுது மீண்டும் இவரை எப்பொழுது காண்போம் என்று ஏங்கி செல்வார்களாம்.

அப்படி ஒரு ஏக்க நிலையை நம் எல்லோரது மனதிலும் ஏற்படுத்தியது நடந்து முடிந்த நமது சங்கத்தின் குடும்ப விழா!

எவ்வளவுதான் பாடுபட்டு விழாவை நடத்தினாலும் அது வெற்றியடைய வேண்டுமானால் தங்களைப் போன்ற நட்புறவுகளின் பெரும் பங்கு இன்றியமையாதது.



உள்ளன்போடும், உணர்வுபூர்வமாகவும், குடும்பத்தோடு கலந்து கொண்டு விழாவை வெற்றியடைய செய்த உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்ப விழா சிறப்புற அமைய பாடுபட்ட செயற்குழு உறுப்பினர்கள், போரூர், பூந்தமல்லி, தாம்பரம், முகப்பேர் கொங்கு சங்க உறுப்பினர்கள் என அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டின் குடும்ப விழா மலர் உங்கள் அனைவரின் இல்லம் தேடி வர பெற்றிருப்பீர்கள். வாசித்து மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

மிக நேர்த்தியாகவும், சிறப்பாகவும் வெளிவர உதவிய விளம்பர நன்கொடையாளர்கள், பொருளாளர் செ.கொங்கு வேள் தலைமையில் இயங்கிய மலர்க்குழு,

உயர்ந்த தரத்தில், அதே நேரம் குறைந்த விலையில் அச்சடிக்க உதவி புரிந்த இணைச்செயலாளர் சி.அரவிந்தன் அவர்கள், ஈடுபாட்டோடு பணியாற்றிய சங்கப் பொறுப்பாளர்கள் என அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். நன்றி பாராட்டுவோம்!

சி பி ஆர் என்று அழைக்கப்படும் கொங்கு மைந்தன்திரு.சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்கள் நமது நாட்டின் குடியரசு துணைத் தலைவராக பொறுப்பேற்று இருப்பது நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி உள்ளது. ஜாக்கண்ட், மராட்டிய மாநிலங்களில் ஆளுநராகப் பணியாற்றிய அவர் குடியரசுத் துணைத் தலைவராக தனது பணியை மேலும் திறம்பட பணியாற்றுவார் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை.

இந்தியக் குடியரசின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் அவர்கள் தமிழ் மண்ணிற்கும், தாய் திருநாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் வாழ்க! வளர்க!! என்று வாழ்த்தி மகிழ்வோம்.

அவர் பதவியேற்றிருக்கும் இந்த மாதத்தில்தான் தமிழறிஞர் சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்களும் அன்றைய சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களும் பிறந்துள்ளார்கள். இத்தருணத்தில் அப்பெருமக்களை நினைவு கூருவது நமது கடமையாகும்.

வரும் செப்டம்பர் 28 அன்று நடைபெறும் நமது சங்கத்தின் பொதுக்குழுவிற்கான அழைப்பிதழை அனைவரும் பெற்றிருப்பீர்கள். பொதுக்குழுவில் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.

செப்டம்பர் 14 அன்று 'கொங்கு மாளிகை' திறப்பு விழா காணும் கரூர் மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கத்தையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

விளையன் குலத்தைச் சேர்ந்தவரும், ஈரோடு பல்லவா டெக்ஸ்டைல் குழுமத்தின் நிர்வாக இயக்குனருமான திரு துரை.பழனிசாமி அவர்கள் தென்னிந்திய ஆலை சங்கத்தின் (சைமா) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமைக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

அன்புடன்

வீ.க.செல்வக்குமார்
தலைவர்



# கொங்கு நண்பர்கள் சங்கம்

## சென்னை

(பதிவு எண் : 282/76)



## கொங்கு மகளிர் விடுதி




Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
chennaikongu@gmail.com
Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919

## தங்கும் விடுதி




"தீரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
chennaikongu@gmail.com
Ph : 044 - 4266 8046
Cell : 93815 45451

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

## கொங்கு மாணவர் விடுதி




AC Rooms Available
Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
chennaikongu@gmail.com
044 - 4351 0460 | Cell : 63839 85919

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்!!

15-வது குடியரசு துணைத்தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் மணியன் குலத்தைச் சார்ந்த மாண்புமிகு திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகஸ்ட் 15 ம் தேதி சுதந்திர தினம் சங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நமது கொங்கு நண்பர்கள் சங்கத்தின் விளையாட்டு விழா மற்றும் குடும்பவிழா இனிதே முடிவுற்றதை அனைவரும் அறிவீர்கள்!! வருடாந்திர விளையாட்டு விழா பூந்தமல்லி சவீதா The Pupil எக்கோ பள்ளி வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது.ஏறத்தாழ 800 பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் 64 வது குடும்ப விழா சவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள எம்.எம்.கன்வென்ஷன் அரங்கில் நடைபெற்றது. சவீதா பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் என்.எம்.வீரையன் தலைமையேற்றார்.சேலம் திரிவேணி குழுமத் தலைவர் பி.பாலசுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழா பேரூர் ஆதினத்தின் வாழ்த்துரையோடு துவங்கியது.சமுதாயத்திற்குத் தனித்துவமான சேவை ஆற்றியவர்களைக் கௌரவிக்கும் வகையில் கடந்த 20 ஆண்டுகளாக கொங்கு மாமணி விருது வழங்கப் படுகிறது.இந்த ஆண்டு மகேந்திரா& மகேந்திரா ஆட்டோமோடிவ் டெக்னாலஜி பிரிவின் தலைவர் திரு. ஆர்.வேலுசாமி அவர்களுக்கும், நாமக்கல் NTC குழுமத் தலைவர் திரு.கே.சந்திர மோகன் அவர்களுக்கும் கொங்கு மாமணி விருது வழங்கப்பட்டது .



சென்னை தமிழ் பல்கலைகழகத்தில் பேரூர் சுந்தரசுவாமிகள் நினைவாக தமிழ் இருக்கை அமைய ரூபாய் 5 இலட்சம் நன்கொடை சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது. மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது.இந்த இரண்டு விழாக்களும் நடைபெற தங்கள் பள்ளி மைதானத்தையும்,அரங்கையும் அளித்த சவீதா பல்கலைக்கழக வேந்தர் டாக்டர்.திரு. என்.எம்.வீரையன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!!

சுமார் 1500 பேர் பங்கேற்ற இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை தலைவர் திரு. வீ.க.செல்வக்குமார், பொருளாளர் திரு.செ. கொங்கு வேள் , துணைத்தலைவர்கள் திரு.ஆர்.சண்முக வேல்,திரு.V.P.வீரப்பன், இணைச் செயலாளர்கள் திரு.சி. அரவிந்தன்,திரு.பி.ரவி உள்ளிட்ட நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் விழா சிறப்புற அமைத்திருந்தனர்.விழா மலரைப் பலரும் பாராட்டும் வண்ணம் சிறப்புற வடிவமைத்திருந்த குழுவினருக்கும்,விளம்பரங்கள் நல்கிய சொந்தங்கள்/ நண்பர்கள் என அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**
செயலாளர்


SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org

தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்

புலவர் செ. இராசு



# அழியாமல் தொடரும் கொடைகள்

அழியாமல் தொடரும் கொடை

தமிழகக் கோயில்கள் பலவற்றிற்கும் பலரால் பற்பல கொடைகள் வழங்கப்பட்டன இன்று அவை கோயிலுக்கு உரியனவாக இல்லை, கொடை கொடுத்தவர்கள் இக்கொடை சந்திர சூரியர் உள்ளவரை நின்று நிலைக்க வேண்டும் என்று கல்வெட்டாகப் பொறித்தனர்.

1276 ஆம் ஆண்டு சேமூர், ஈரோடு பெருமாள் கோயிலுக்குக் கொடையாக கொடுக்கப்பட்டது. 1527 ஆம் ஆண்டு பெருமாள், சிவன்கோயில் இரண்டிற்கும் லக்காபுரம் கொடையாகக் கொடுக்கப்பட்டது.


இன்றும் பெருமாள் கோயில் விஜயதசமி அம்புசேர்வை விழாவை லக்காபுரம் ஊரவர்கள். (ஆதிகுலம்) சேமூர் ஊரவர்கள் (பெருங்குடிகுலம்) இணைந்து நடத்துகின்றனர்.

லக்காபுரம் ஊரவர்கள் (ஆத்குலம்) ஐப்பசி பவுர்ணமியில் தொண்டீசுவரர் கோயிலில் அன்னாபிசேகம் செய்து அன்னதானம் செய்கின்றனர். இது அரிய நிகழ்வாகும்.

சிறுவர் பாடல் -பெ.தூரன்

# பூனை

பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பொந்துக்குள்ளே போன எலியைப்
பிடிக்கப் பார்க்கிறேன்
பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பிடியைத்தப்பிப் போன எலியைத்
தேடிப் பார்க்கிறேன்
பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
போன எலியும் திரும்புகின்ற
நேரம் பார்க்கிறேன்
பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பார்த்த கண்ணும் பூத்துப்போச்சு
தூங்கப் பார்க்கிறேன்.



"தன்னம்பிக்கைச் சிந்தனை"

**ஆர்வத்திடம் அடிமைப்பட்டவர்கள் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கிறார்கள்!**

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்









# கொங்கு மங்கலம் குழுவினரின்

சமுதாய அக்கறையுடன், இரண்டாம் ஆண்டு

# கொங்கு மணமகன் மணமகள் அறிமுக விழா



**நாள் : 05.10.2025, ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 8:45 - 3.00 மணி வரை**
**இடம் : ஸ்ரீ ராமச்சந்திரா திருமண மாளிகை, பூந்தமல்லி.**



கொங்கு சமுதாயம், ஆல்போல் தழைத்து, அருகு போல் வேரூன்றி,
மூங்கில் போல் சுற்றம் சூழ்ந்து, வாழையடி வாழையென, பதினாறும் பெற்று,
பெருவாழ்வு வாழ்க, என்று வாழ்த்துரை வழங்கிட,

விளையன் குல - திரு. **R.தேவராஜன்,** அவர்கள்,
தலைவர், கொங்கு வேளாளர் கவுண்டர்கள் பேரவை.

சாத்தந்தை குல - திரு. **T.K.சுப்பிரமணியன்,** அவர்கள்,
துணைத் தலைவர், கொங்குநாடு அறக்கட்டளை.

பயிரன் குல - திரு. **V.K.செல்வகுமார்,** அவர்கள்,
தலைவர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்.

பண்ணை குல - திரு. **M.சக்திவேல்,** அவர்கள்,
இன ஒருங்கிணைப்பாளர், கொங்கு குல சபை.

வெள்ளம்பர் குல - **Dr.K.சின்னராஜ்,** அவர்கள்,
ஒருங்கிணைப்புச் செயலாளர், முத்தூர் வெள்ளம்பர் குல நல அறக்கட்டளை.

**வரவேற்புரை:**
பண்ணை குல - திரு.**M.ரமேஷ்,**
கொங்கு மங்கலம் குழு.

**நிர்வாகம்:**
காடை குல - திரு.**P.ரமேஷ்,**
கொங்கு மங்கலம் குழு.

**நன்றியுரை:**
செம்பன் குல - **Dr.P சதீஷ்குமார்,**
கொங்கு மங்கலம் குழு.

**ஒருங்கிணைப்பு:**
விளையன் குல - திரு.**S.பாண்டியன்,**
முன்னாள் செயலாளர், போரூர் கொங்கு நல சங்கம்,
முன்னாள் செயலாளர், KITCO, சென்னை.

மேலும் விவரங்களுக்கு:

முன்பதிவு அவசியம்

**www.kongumangalam.in**
**9445265569**

*அனுமதி நிபந்தனைகளுக்குட்பட்டது

Silver Sponsors

Spring Digitals | InGenium | VVS EVENTS ENTERTAINMENT

புலவர் செ.இராசு

# பக்தி பிடித்த சடைச்சியம்மாள்

பதினான்கு பழம்பெரும் ஊர்களைக் கொண்ட கொங்கு காங்கய நாட்டின் பொதுத்தலமாகவும், தலைமைத்–தலமாகவும் விளங்கும் சிறப்புடையது சிவமலை. அச்சிறப்புமிகு தலத்தின் தேர்த்திருவிழாவை காங்கயநாட்டுப் பதினான்கு ஊர்க்காரர்கள் நடத்துவதும், அவர்கள் பரி வட்டம் கட்டி சிறப்பிக்கப்படுவதும் இன்றும் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

அருணகிரிநாதர் சிவமலையாண்டவரை வணங்கி சந்தப் பாடல்கள் பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ் படிக்கும் வாசல் இது என்று சிவமலைக் குறவஞ்சியில் மடவளாகம் லட்சுமணபாரதி பாடியுள்ளார். பிள்ளைத்தமிழ், தூது, புராணம் முதலிய பல இலக்கியங்கள் இத்தலத்திற்கு உண்டு. எல்லாவற்றையும் விட சிவவாக்கியர் என்ற புகழ்பெற்ற சித்தர் அங்கு வாழ்ந்ததும், அவர் அடக்கமான புனித இடம் அங்கு இருப்பதும் சிறப்புடையது.

சங்க இலக்கியத்தில் ஏறை என்று சிறப்பிக்கப்பட்ட அத்தலத்தின் மீது கொங்கு வேளாண் மக்களுக்குப் பெரும்பற்று உண்டு. பலர் சிவன்மலைக் கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சிவமலை இலக்கண விதிப்படி சேமலை என்றாகும். சேமலைக் கவுண்டர் என்பதும் சிவமலைப் பெயரே ஆகும். சிவமலை அடிவாரத்தில் முன்பு ஊரில்லை. அருகிலுள்ள பட்டாலி தான் சிவமலைக்குரிய ஊராகும். (அதேபோல் சென்னிமலைக்கு உரிய ஊர் பிடாரியூர் ஆகும்). சிவமலையே பட்டாலியூர் என்றும், சிவமலையாண்டவரை பட்டாலி பால்வெண்ணீசுவரர் பாலன் என்றும் இலக்கியம் கூறுகின்றது.

*“ஒருநாள் கயிலாயத்தில் சிவன் பார்வதியாகிய அம்மையப்பரோடு முருகன் உள்ள கயிலைக் காட்சியைக் காண விரும்பி கயிலைக்கு வருவதாக வேண்டிக் கொண்டாள். அசரீரியாக சிவபெருமான் ‘அம்மா! சடைச்சி! நீ வந்து காணவிரும்பிய கயிலைக் காட்சியை இங்கே சிவமலையிலேயே உனக்குக் காட்டுகிறேன்’ என்று காட்சி கொடுத்தார். உள்ளம் உருகிக் கண்ணீர் சிந்தி அகம் மகிழ்ந்து சடைச்சியம்மாள் வணங்கினாள். அவர் தவக்கோலம் கண்டு சடைச்சியை சடைச்சியம்மாள் என்று மக்கள் அழைத்தனர்”*



பட்டாலியில் கண்ணகுலத்தில் தோன்றிய அரசப்ப கவுண்டருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. வள்ளி என்று பெயர் வைத்ததினாலோ என்னவோ எப்பொழுதும் முருகன் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருந்தாள், கண்ணில் தோன்றிய எப்பொருளிலும் முருகனைக் கண்டாள். பார்த்த எல்லோரையும் முருகன் வடிவாக எண்ணினாள், தினமும் மூன்று வேளையும் முருகனை, சிவமலையாண்டவரை மனமுருக வணங்கினாள்.

தக்க பருவம் அடைந்தும் திருமணத்தை வெறுத்தாள். மறுத்தாள். சடைச்சி என்று அழைத்தனர். எருதுகள் மீது கோணிப் பைகளை இரு சடாமுடியோடு இருந்த வள்ளியை அவர் கோலம் கண்டு எல்லோரும் புறமும்



தொங்கவைத்து
அருகிலுள்ள ஊர்களுக்கு செல்வாள். மக்கள் அதில் தானியங்களைப் போட்டு நிரப்பினர். இறைபணிக்கு அதைச் செலவிட்டாள்.

ஓலைச்சாலை அமைத்தாள். அதனை சடைச்சிமடம் என்று மக்கள் கூறினர். அடியார்க்கு அமுது படைத்தாள். தண்ணீர்ப் பந்தல் வைத்து எப்பொழுதும் உப்பு, ஊறுகாய், நீராகாரம் அளித்தாள். நந்தவனம் ஏற்படுத்தி சிவமலையாண்டவருக்கு பூமாலை அளிக்க ஏற்பாடு செய்தாள். படிகள் அமைத்தாள். இளைப்பாற மண்டபம் கட்டினாள். விபூதியளித்து நோய் நீக்கம் செய்தாள். எல்லோருக்கும் பக்தி வழியைக் காட்டினாள்.'

இறைவனைக் கண்டு நேரில் காட்சி பெற்ற பின் சடைச்சியம்மாள் பூவுலகில் வாழ விரும்பவில்லை. சதா சிவமலையாண்டவரிடம் சேருகிறேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். ஒருநாள் முழுநீறுபூசிய மேனியராக, மஞ்சள் உடையுடுத்து பூமாலையுடன் பக்தி பரவசமாக சிவமலையாண்டவர் சன்னதி சென்றார். பின் வெளியே வரவேயில்லை. சடைச்சியம்மாள் என்ன ஆனார்? எங்கு சென்றார்? எவருக்கும் தெரியவில்லை. எல்லோரும் தேடினர். தேடித் தேடி அலைந்தனர். அசரீரியாக நான் சிவமலையாண்டவர் பாதத்தருகில் உள்ளேன் என்ற வாக்கு எழுந்தது. கேட்டவர்கள் வியப்படைந்தனர்.

மக்கள் சடைச்சியம்மாள் உருவத்தை சிறுகல்லில் வடித்து சிவமலையாண்டவர் பாதத்தருகே வைத்தனர். தாய் வயிற்றில் உதிக்காத சிவபெருமான் காரைக்கால் அம்மையாரை தாயே என்று அழைத்தது போலவே சடைச்சி அம்மாவையும் அம்மா என்று அழைத்தார். நடராசப் பெருமான் ஆடல் உருவத்தின் அடிப்பகுதியில் விரும்பிப் பேய் வடிவம் ஏற்ற காரைக்கால் அம்மையார் உருவத்தைப் பொறிப்பது வழக்கம். அது போல் சிவமலையாண்டவர் பாதத்தருகே சடைச்சி யம்மாள் உருவம் நெடுங்காலம் இருந்தது.

சிவமலையாண்டவர் குறவஞ்சி பாடிய மடவளாகம் லட்சுமண பாரதி (1769-1859) இதைப் பார்த்து சடைச்சியம்மாள் வரலாறு கேட்டு வியந்துள்ளார். தம் குறவஞ்சியில்

''பக்தி பிடித்த சடைச்சியம்மாளை - தன் பாதங்களில் வைத்திருக்கும் சிவமலையாண்டவர்''

என்று பாடியுள்ளார். பிற்காலத்தில் வந்தவர்களுக்கு சடைச்சியம்மாள் வரலாறும் தெரியவில்லை. பெருமையும் புரியவில்லை. இன்று சிவமலையாண்டவர் சன்னதியில் சடைச்சியம்மாள் உருவச் சிலை இல்லை. எங்கு சென்றாரோ தெரியவில்லை.

சிவமலையில் 18ஆம் படியைப் 'புராணப்படி' என்பர். பதினெண் புராணம் என்று கூறப்படுவதால் அப்பெயர் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். அப்பதினெட்டாம்படி சடைச்சி கட்டியதாகும். அங்கு சடைச்சி வாழ்வதாக மக்கள் நம்புகின்றனர். "பத்தினிப் பெண் சடைச்சியம்மாள் பதினெட்டெனும் புராணப் படியில் குடியிருப்பாள்'" என்பது குறவஞ்சி வரிகளாகும்.

சைவ உலகில் தேவாரம் பாடிய திருநாவுக்கரசரின் சகோதரியார் திலகவதியார் திருமணம் செய்து கொள்ளாமல் சமயப் பணி பல புரிந்தது போல கொங்கு நாட்டு வேளாளர் குடும்பத்துப் பெண்ணும் சமயப்பணி புரிந்தது வியப்பான செயலல்லவா?

சிறு கதை

டாக்டர் அசோகன்

# வாழ வைத்த தெய்வம்

என் கண்ணிலிருந்து தாரைதாரையாக நீர் வழிந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் ஒருவர் கிசுகிசுப்பது காதில் விழுந்தது,"யாரென்று அடையாளம் தெரியவில்லை, வந்ததிலிருந்தே கண்ல தண்ணி. சரவணனுக்கு தெரிந்தவராயிருக்கும்". அவர்களுக்கு தெரியாது இன்று மாலை 5 மணிக்குதான் இவரை நான் முதல்முறையாக பார்த்தேனென்று. நான் பார்த்த அரை மணி நேரத்தில் அவர் 'அது'வாகி விட்டார்.

அந்த இறுக்கமான சூழ்நிலையிலும் அவருடனான என் சந்திப்பு துல்லியமாக மனத்திரையில் ஓடியது. (அப்போது அவர் பெயர் மோகன் என்று எனக்கு தெரியாது.என்னிடம் சரவணன் என்று கூறியிருந்தார்.)



நான் நுங்கம்பாக்கம் ரயிலடியில் ஒரு மூலையாக நின்று புகைப்பிடித்து கொண்டிருந்தேன். அப்போதுதான் இவர் என் அருகே வந்து 'நெருப்பு கிடைக்குமா'வென கேட்டார். மிக எளிதாக இருவர் நெருக்கமாகும் ஒரு வழி, தேவையும், செலவின்றி பகிர்தலும். புகைத்துக்கொண்டிருந்த சிகரெட்டை நீட்டினேன். பற்ற வைக்கும்போதுதான் கவனித்தேன் அவருடைய கைகள் நடுங்குவதை. எனக்கும் யாரிடமாவது பேசினால் நன்றாயிருக்கும் போலிருந்தது.

பெயர் 'சரவணன்' என்றும் சைதாப்பேட்டையில் வசிப்பதாகவும் சொன்னார். சற்று பேசி கொண்டிருக்கும் போதுதான் கவனித்தேன் அவர் மிகவும் பதட்டமாக இருந்ததை. பத்து நிமிட பேச்சுக்குள் கையிலிருந்த பாட்டில் தண்ணியை மூன்றுமுறை குடித்துவிட்டார். பாவம் மனுஷனுக்கு ஏதோ பிரச்சனை. நமக்கே தலைக்குமேல் போய் கொண்டிருக்கிறது. வந்த வேலையை கவனிப்போம் என்று நினைத்துக் கொண்டு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.


பத்து நிமிடங்கள் இலக்கில்லாமல் பிளாட்பாரத்தில் அலைந்துவிட்டு இறங்கி தண்டவாளங்களையொட்டி கோடம்பாக்கம் நோக்கி நடக்க ஆரம்பித்தேன். நடக்கும் போதுதான் எனக்கு முன்னே கொஞ்ச தூரத்தில் சற்றுமுன் சந்தித்த 'சரவணன்' நடந்து கொண்டிருந்ததை. அதே இடைவெளி விட்டு நாங்களிருவரும் நடந்து கொண்டிருந்தோம், எதிர்திசையில் ரயிலொன்று வரும்வரையில். ரயில் வேகமாக அருகில் நெருங்கியதும் 'சரவணன்' அதன் முன்னே பாய்ந்ததும் 'மடேல்' என்ற சத்தத்துடன் தூக்கி வீசப்பட்டதும் எதிர்பாராமல் நொடியில் நடந்து முடிந்து விட்டது.

சற்றுமுன் என்னுடன் பேசி கொண்டிருந்தவர் பலத்த காயத்துடன் தூக்கிவீசப்பட்டதின் முழு தாக்கத்தையும் உள்வாங்குமுன் அனிச்சையாக சத்தம் போட்டுக்கொண்டே அவரை நோக்கி ஓடினேன். அருகில் சென்று பார்த்தபோது ரத்தவெள்ளத்தில் ஒரு சதை குவியலாக அவரை பார்த்தேன். அதற்குள் மளமளவென்று கூட்டம் சேர்ந்து ஜாக்கிரதையாக தள்ளி நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது

சிலர் 'சரவணனை' புரட்டிப்பார்த்து விட்டு 'ஒண்ணுமில்லை' என உதட்டை பிதுக்கினார்கள். யாரோ ஒருவர் அவசர உதவிக்கு போன் செய்ய சற்று நேரம் கழித்து ஆம்புலன்சு வர அதற்கு பிறகு போலீசும் வந்தார்கள். அவர்கள் பிணத்தின் சட்டைப்பையிலிருந்து அடையாள அட்டையை எடுத்துப்பார்த்து அவர் பெயர் மோகன் மற்றும் முகவரி அறிந்து வீட்டிற்கு தகவல் சொன்னார்கள். போலீஸ் வழக்கமான விசாரணைக்கு பிறகு என்னையும் பிணத்துடன்

ஏற்றிக்கொண்டு ஜிஹெச்சுக்கு போனார்கள்.

ஜீஹெச்சில் அவசர சிகிச்சை பிரிவில் காத்திருக்க வேண்டியிருந்தது. அப்போது நான் மட்டும் கொஞ்சநேரம் 'அதோடு' இருக்க வேண்டிவந்தது. தனியாக குலுங்கி குலுங்கி அழுதேன். திரும்பி வந்தபோது அழுது கொண்டிருந்த என்னைப்பார்த்த காவலர்கள் 'பாவம், இளகிய மனசு போல' என உச் கொட்டினார்கள். இன்னும் கொஞ்சநேரம் கழித்து டாக்டர் அங்க அடையாளம் பார்த்து பதிவேடுகளில் பதிந்து கொண்டிருந்த போதுதான் நான்கைந்து பேர் பதட்டத்துடன் ஓடிவந்து மோகன் பற்றி விசாரித்தார்கள். விபரம் தெரிந்தவுடன் வந்தவர்களில் ஒருவர் 'மாமா' என்று அலறி கொண்டு பிணத்தை நோக்கி பாய்ந்தார். பாய்ந்தவர் அடையாளத்தை உறுதி செய்து கொண்டு பெருங்குரலெடுத்து தலையில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தார். ஆஸ்பத்திரி ஊழியர்கள் அவரை பிணத்திட மிருந்து பிரித்தெடுத்து சமாதானப்படுத்தி வெளியில் கொண்டு விட்டார்கள். டாக்டர் நடைமுறைகளை முடித்து 'பாடி'யை பிணவறைக்கு அனுப்பினார்.அப்புறமும் சுமார் ஒருமணி நேரம் கழித்துதான் ஆஸ்பத்திரியின் இன்னொருகோடியில் உள்ள பிணவறைக்கு மோகனை நகர்த்த முடிந்தது. இதற்கிடையில் மருத்துவமனை ஊழியர்கள் மோகனின் உறவினர்களிடம் பிணவறையில் ஏற்கெனவே ஐம்பத்திரண்டு பிணங்கள் இருப்பதாகவும் ஏ.சி குறைவாக இருப்பதாகவும் 'கொஞ்சம்' கவனித்தால் நல்ல இடம் ஏற்பாடு செய்வதாகவும்



கூறி பணம் வாங்கிகொண்டார்கள்.

ஒரு வழியாக இந்த வேலை முடிந்தவுடன் போலீசார் மறுநாள் காலை போஸ்ட்மார்டம் சீக்கிரம் நடக்க ஏற்பாடு செய்வதாக சொல்லி கொஞ்சம் பணம் வாங்கிகொண்டு கிளம்பினார்கள். மோகனின் உறவினர்களில் மைத்துனரை தவிர மற்றவர்கள் எங்கோ சென்றார்கள். அவர்கள் திரும்பும் வரை நானும் அவரும் தனித்து விடப்பட்ட போது என்னை பற்றி வினவியதற்கு மோகனின் நண்பன் என்று மட்டும் கூறி வைத்தேன். கொஞ்ச நேரம் கழித்து அனைவரும் மோகன் வீட்டுக்கு சென்று காலையில் திரும்புவது என முடிவு செய்யப்பட்டது. நானும் அவர்களுடன் ஒட்டிக்கொண்டேன். அண்ணாநகரிலுள்ள மோகனின் வீட்டிற்கு அருகில் செல்லச்செல்ல மைத்துனரின் அழுகை அதிகமாயிற்று. வீட்டில் நுழையும் முன்னரே மோகன் மனைவி ஓடோடி வந்து தம்பியின் கழுத்தை கட்டிக்கொண்டு கதறோ கதறென்று கதறினார்.

அப்பொழுதுதான் வீட்டில் நிறைய உறவினர்கள் இருந்ததையும் அவர்களில் பலர் அழுது கொண்டிருந்ததையும் கண்டேன்.மோகனுக்கு ஒரே மகனென்றும் அவர் டில்லியில் வேலையில் இருப்பதாகவும் அறிந்தேன். சரவணனின் வயதான, பார்வை குறைந்த தாய் அழுததை பார்க்க பரிதாபமாயிருந்தது. அந்த அம்மா அழுததை பார்க்கும் போது என் தாயின் நினைவு வந்து என்னாலும் அழுகையை அடக்க முடியாமல் நான் அழுது கொண்டே சற்று நகர்ந்தேன். கால் போன போக்கில் நடுநிசி வரை நடந்து விட்டு சரவணனின் வீட்டுக்கே திரும்பினேன். கூட்டம் அதிகரித்திருந்தது. அப்போதுதான் நான் ஆரம்பத்தில் கூறிய என்னைப்பற்றிய அடையாள வினவல் நடந்தது.

இரவு முழுதும் அவ்வப்போது உறவினர்களும் நண்பர்களும் மோகனின் ஊரிலிருந்து வந்தனர். நெருங்கியவர்கள் வந்த நேரங்களில் அழுகை சத்தம் அதிகமாயிற்று. மோகன் மனைவியின் உறவினர்கள் அவரை கட்டிபிடித்து பலவாறு புலம்பியபடி அழுதார்கள். அவரும் திரும்ப திரும்ப 'நோயில போயிருந்தாலும் பரவாயில்லையே, மனசு ஆறிடுமே! காலத்துக்கும் எனக்கு பழி உண்டாக்கிட்டு போயிட்டாரே!' என்று புலம்பியபடி இருந்தார். எனக்கும் அவருடைய கவலை நியாயமாக பட்டது. கணவன் தற்கொலை செய்து



கொண்டால் மனைவி காரணமாயிருக்கலாமோ என சமுகம் சந்தேகபடுகிறதே! அந்த அம்மாவை பார்த்தால் மிகவும் நல்லவராக தெரிகிறார். வருபவர்கள் யாரும் அவரை குற்றம் சொல்லவில்லை. இருந்தாலும் இவர் மீதமுள்ள வாழ்நாளை இந்த குற்ற உணர்வோடுதான் கழிக்க வேண்டி வருமோ?மோகன் தற்கொலை முடிவுக்கு வந்தபோது மனைவி குறித்தும் யோசித்திருக்க வேண்டுமோ? புத்திரசோகத்தில் தள்ளாத வயதில் கதறிகொண்டிருக்கும் தாயையும் பற்று கோல் இழந்த கொடிபோல் பரிதவிக்கும் மனைவியையும் காலையில் வரப்போகும் மகனையும் கணக்கில் கொண்டால் இறந்தது மோகன் மட்டுமல்ல இவர்களின் மகிழ்ச்சியும் தான் என்றே தோன்றுகிறது. ஒரு நிலைக்கு மேல் மனிதன் குடும்பம் என்ற அலகின் ஒரு அங்கம்தானே. ஒரு அங்கம் குறைந்தாலும் அது ஊனம்தானே! முதிர்ந்து விழும் தென்னைமட்டைக்கும் வெட்டியெடுக்கப்பட்ட குருத்தோலைக்கும் வித்தியாசம் உண்டல்லவா. இந்த எண்ணங்களெல்லாம் என் மனதில் 'இழவு' வீட்டிலும் ஓடிகொண்டிருந்தது

காலை எட்டு மணிக்கு மோகனின் மகன் வந்து சேர்ந்தான். இருபத்தைந்து மதிக்கத்தக்க வசீகரமானவன் டில்லியில் நல்ல வேலையாம். பையன் விழுந்து புரண்டு கதறி அழுததை பார்த்து மொத்தக்கூட்டமும் ஒருமுறை குலுங்கியது.

காலையில் பத்துமணிக்கு ஜீஹெச்க்கு சென்றோம். ஒரு வழியாக போஸ்ட்மார்ட்டம் முடிந்து வீட்டுக்கு 'பாடி'யை கொண்டுசேர்க்க நான்கு மணியாயிற்று. சுருக்கமாக சொல்வதானால் ஒரு முறை போஸ்ட்மார்ட்டத்திற்கு அலைந்த ஒருவன் தற்கொலைக்கு துனிய மாட்டான். 'பாடி'வீட்டுக்கு வந்தவுடன் மோகனின் மனைவி,மகன்,தாய் மற்றும் சகோதரி ஆகியோர் கதறின கதறல் எந்த கல்நெஞ்சையும் கரைத்துவிடும்.ஒரு அகால மரணம் சுற்றத்தையும் நட்பையும் எப்படி பாதிக்கிறது என்பதை நான் மோகன் மரணத்தில் ஒரு மௌனசாட்சியாக இருந்து அனுபவித்தேன்.

பிணத்தை சடங்குகள் முடித்து இறுதி பயனத்திற்கு வண்டியேற்ற தூக்கவேண்டி வந்தபோது நானும் ஒருவனாக தோள் கொடுத்தேன்.

இடுகாடு அதற்கேயுரிய காலம்காலமாக போதிக்கப்பட்ட ஒரு இனம்புரியாத அமைதி யோடும் பயமுறுத்தலோடும் காத்திருந்தது. வெட்டியானின் வழக்கமான சடங்குகளுக்கு பிறகு

'ஊத்தை குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப் புனலினிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் அவர் பண்ணும்பாண்டம்
வரையோட்டுக்கும் ஆகாதென்று .....'

பாடினார். அந்த அமானுஷ்யமான சூழ்நிலையில் சேகண்டி, சங்கு பின்னிசையுடன் ஆழமான குரலில் அவர் பாடியது மனதை பிசைந்தது. கட்டைகளை அடுக்கி பிணத்தின் முகத்தை வறட்டியால் மூடுமுன் வெட்டியான் உறவினர்களை அழைத்து கடைசியாக 'முகம்' பார்க்குமாறு கூறினார்!. நான் என்னையும் அறியாமல் விசும்பியபடி இருந்தேன். மோகனின் மகன் சிதையை நீர் பானையுடன் மூன்றுமுறை வலம் வந்து தீ மூட்டினார். வெட்டியான் அனைவரையும் திரும்பி பார்க்காமல் செல்லுமாறு கூறினார்.

நேற்று வரை அறியாமல் இருந்து,நான் தற்கொலை செய்வதற்காக ரயில் முன் பாய நினைத்திருந்தபோது என்னை சற்று முந்தி கொண்டு, உயிரை விட்டு ஒரு தற்கொலையின் வலி, சுற்றத்தின் இழப்பு, அதன் தாக்கம் அனைத்தையும் கண் முன்னே நிகழ்த்தி காட்டி என்னை சாவிலிருந்து மீட்டு வாழ வைத்த தெய்வத்தை நினைத்துக் கொண்டு கண்ணில் நீருடன் திரும்பி பாராமல் வாழ்வை நோக்கி நடந்தேன்.

நூல் நயம்

# மனிதன் உடம்பல்ல

## "பெரியசாமி தூரனின் பண்பாட்டு பங்களிப்பு"

ஆசிரியர்: பழனி கிருஷ்ணசாமி
தூரன் ஆய்வில் முதல் நூல்

அறியப்படத்தக்க அளவுக்கு அறியப் படாமலும், போற்றப்பட வேண்டிய அளவுக்கு போற்றப்படாமலும், தமிழ் அறிவுலகம் மறந்து போன அறிஞர் பெரியசாமி தூரன்.



பெரியசாமி தூரனின் பயனுள்ள பண்பாட்டு பங்களிப்பை வகுத்தும் தொகுத்தும் சொல்லும் ஒரு சிந்தனையாளனுக்காக காலம் காத்திருந்தது அவர்தான் பழனி கிருஷ்ணசாமி.

தமிழ் மரபின் புரிதலுடன் புது மரபுகளை வரவேற்கும் தூரனின் தனித்துவத்தை நுட்பமான பார்வையில் தேடுதலில் தீவிரத்துடன் முன் வைக்கிறார் நூல் ஆசிரியர்.

நூலின் தலைப்பே தூரன் படைப்புகளுக்குள் எவ்வளவு ஆழமாக பயணித்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக விளங்குகிறது.

தூரனின் முதல் கட்டுரைத் தொகுப்பான பூவின் சிரிப்பு நூலில் உள்ள சாதி இல்லை என்ற கட்டுரையில் மனிதன் உடம்பல்ல என்று பேசுகிறார் தூரன்.

எளிமையாக சொல்லப்பட்ட ஆனால் சிந்திக்கச் சிந்திக்க ஆழத்தில் கொண்டு செல்லும் இந்தக் கருத்தையே நூலின் தலைப்பாக்கி இருக்கிறார் கிருஷ்ணசாமி. தூரனுக்குள் மூழ்கி எடுத்த முத்து போல் நூலுக்கு தலைப்பிட்ட தரத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தூரனின் படைப்புகள் குறிப்பாக கவிதைகள் கிராமிய உழவர் பின்னணியில் இருந்து உருவானவை என்றும் 'நாட்டார் பாடல்களை காட்டிலே வந்த கவிதை' என்று தொகுத்து இருப்பதால் உளவியலை உணர வேண்டும் என்றும் பழனி. கிருஷ்ணசாமி தெரிவிக்கிறார்.

இன்று மக்கள் கலையாக மாறி இருக்கிற 'வள்ளியம்மை ஒயில் கும்மி'யையும் கொங்கு மண்டலத்தின் நாட்டார் காப்பியமாக பெருமை பெற்றிருக்கும் 'குன்றுடையான் கதை'யையும் உணர்ந்து அனுபவித்து அவற்றின் பெருமையை பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து அறிமுகப்படுத்திய தூரனின் கலை நுட்பம் வியந்து பாராட்டப்படுகிறது. பண்பாட்டு வரலாற்றின் பக்கங்களை செழுமைப் படுத்தக்கூடிய புரிதல் இது என்று கூறலாம்.

தூரனின் சாதனைச் சிகரம் கலைக்களஞ்சியம்.

தமிழர் அறிவு மரபை செழுமை செய்த ஒரு கட்டமைப்பாக கலைக்களஞ்சியத்தை மதிப்பிடுகிறார் நூலாசிரியர். கலைக்களஞ்சியம் ஓர் இனத்தின் நாகரிக பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு என சுட்டிக்காட்டும் ஆசிரியர் தூரனின் அயரா உழைப்பின் வடிவம் என நம்மை உணர்ச்சி வசப்பட வைக்கிறார்.

வாழ்க்கை என்னும் சுவை மிக்க விரிந்த ராக ஆலாபனையில் குறிப்பிட்ட ஓர் அற்புத சஞ்சாரம் சிறுகதை என்று தம் இசை ததும்பும் உள்ளத்தால் இலக்கணம் வகுக்கும் தூரன் மொத்தம் 66 சிறுகதைகள் எழுதி ஐந்து தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கிராமத்து

மக்களின் நம்பிக்கை, தன்மானம், சாதி எதிர்ப்பு, வறுமை, கலை, மனித நேயம் என பல கோணங்களைக் கொண்டவை அவரது சிறுகதைகள்.

பண்பாட்டு வரலாற்றுக்கு சிறுகதைகள் ஆவணமாகும் என்கிறார்.

தூரனின் 15 கட்டுரைத் தொகுதிகளில், 11 தொகுதிகள் பாரதியைப் பற்றியவை. சுதேச மித்திரன் அலுவலகம் சென்று வெளிவராத பல கட்டுரைகளைத் தேடித் தந்தவர் தூரன். அதனால் பாரதிமயமான உள்ளம் அவருடையது. பாரதி ஆய்வுக்கு முதல் அடி எடுத்து வைத்தவர் தூரன் என்பது ஆசிரியரின் மதிப்பீடு.

மாணவப் பருவம், ஆசிரியப்பருவம், கலைக்களஞ்சிய பருவம் என்று தூரனின் வாழ்வை பகிர்ந்துரைக்கும் கிருஷ்ணசாமி, அவருடைய மூன்று பருவங்களிலும் ஆளுமை சிறந்தது என்கிறார்.

தூரனின் இசை மரபு தமிழ் மரபில் தொடங்கி வளர்ந்துவிட்ட கர்நாடக இசை மரபோடு இரண்டறக் கலந்து இருப்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

பண்பாட்டு மரபின் தொடர்ச்சியாகவே தமிழனின் அறிவு சார் மரபுப் பணியாக தூரனின் கலைக்களஞ்சியப் பணி அமைகிறது. தூரனின் ஆளுமை வளர்ச்சிக்குப் பல காரணிகள் இருந்தாலும் பாரதியே அவரைச் செதுக்கிய பெரும் சக்தி எனச் சரியாகவே கண்டறிகிறார் நூலாசிரியர்.

பண்பாட்டு வரலாற்றியல் நோக்கில் தூரன் போற்றத்தக்க பேராளுமை என நிறுவுகிற பணியை பழனி கிருஷ்ணசாமியின் நூல் வெற்றியுடன் முன் வைக்கிறது. பண்பாடே ஒரு சமுதாயத்தின் ஆணிவேர் என்று அடையாளப்படுத்தும் இந்நூல் பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியது.

(இந்நூலுக்கு திரு. சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய அணிந்துரையிலிருந்து சில பகுதிகள்....)

### மனிதன் உடம்பல்ல: பெரியசாமித்தூரனின் பண்பாட்டுப் பங்களிப்பு


| | |
|---|---|
| கட்டுரைகள் | : பழனி கிருஷ்ணசாமி |
| முதல் பதிப்பு | : ஜூலை 2025 |
| MANITHAN UDAMBALLA | : PERIYASAMYTHURANIN PANPAATTUPPANGALIPPU ESSAYS PALANI. KRISHNASWAMI |
| First Edition | : July 2025 |
| Pages | : 136 |
| Price | : Rs. 180/- |
| ISBN | : 978-93-48722-45-4 |
| Released by | : M/s. Yaavarum Publishers<br>24, Shop no - B, S.G.P Naidu Complex,<br>Dhandeeswaram Bus Stop<br>Opp Bharathiar Park<br>Velachery Main Road Velachery, Chennai - 600 042<br>9042461472/9940021472<br>yaavarum.desk@gmail.com<br>Url: www.yaavarum.com; www.be4books.com |




கதை



# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

எழுதியவர்: பெ.தூரன்

## 7 காட்டு மாரியம்மன் கோயில்!

அடுத்த நாள் மாலையில் வெய்யில் சற்றுக் குறைந்ததும் காட்டு மாரியம்மன் கோவிலைப் பார்ப்பதென்று ஏற்பாடாயிற்று.

அதன்படி மறுநாள் மாலை மூன்று மணிக்கே கிளம்பி விட்டார்கள். “சிற்றுண்டியை அங்கேயே சாப்பிட்டுக் கொள்கிறோம். அங்கே சுத்தமான தண்ணீர் கிடைக்குமா?” என்று தங்கமணி பாட்டியிடம் கேட்டான்.

“அங்கே நல்ல ஓடை ஒன்று ஓடுகிறது. அதில் ஓடும் தண்ணீரைக் குடிப்பதால் கெடுதல் வராது” என்றாள் பாட்டி.

சிற்றுண்டி டப்பாக்களை ஒரு துணியில் வைத்துக் கட்டினார்கள். “அதை நான் சுமந்துகொண்டு வருகிறேன்.

எனக்கும் அந்தக் காட்டு மாரியம்மன் கோயிலைக் காண ஆசையாக, இருக்கிறது” என்றான் வண்டிக்காரன்.

அதுவும் நல்லதுதான் என்று நால்வரும் புறப்பட்டனர். ஜின்கா கொஞ்ச தூரத்திற்குத் தங்கமணியின் தோளின்மீது அமர்ந்து சென்றது. பிறகு காட்டுத் தடம் வரவே மரங்களில் தாவித்தாவி அது முன்னால் போகலாயிற்று.

சுமார் 5 கிலோ மீட்டர் நடந்து காட்டு மாரியம்மன் கோயிலை அவர்கள் அடைத்தனர். “முதலில் சிற்றுண்டியைச் சாப்பிட்டு விடுங்கள்” என்றான் வண்டிக்காரன், அவனுக்குப் பசி எடுத்துவிட்டது போலும். மேலும் பாட்டி வீட்டுப் பலகாரங்கள் அவனுக்கு எப்பொழுதும் கிடைக்காதல்லவா?

பாட்டி கோதுமை ஹல்வா அவர்களுக்கென்று ஸ்பெஷலாகச் செய்து வைத்திருந்தாள். அத்துடன் முறுக்கு, வடை எல்லாம் இருந்தன.

ஜின்காவுக்கு ஹல்வா பிடிக்கவில்லை. ஆனால் வடையை வாயில் போட்டுக் குதப்பிக் குதப்பி நன்றாகச் சாப்பிட்டது.

வண்டிக்காரன் பாடுதான் கொண்டாட்டம். மற்ற மூவரும் அவசரம் அவசரமாக ஏதோ சாப்பிட்டார்கள். மீதி இருந்ததையெல்லாம் அவன் ஒரு கை பார்த்துவிட்டான்!

“பாவம், அவனாவது நன்றாகச் சாப்பிடட்டும்” என்று கண்ணகி அவனுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருந்தாள்.

ஓடையில் தண்ணீர் அருந்திவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

அங்கிருந்த பூசாரி இவர்களையெல்லாம் உற்சாகமாக வரவேற்றான். அம்மனுக்குப் பூஜை செய்துவிட்டுப் பிரசாதம் வழங்கினான். அதற்குமேல் அவன் அந்தக் காட்டு மாரியம்மன் கோயில் ரகசியத்தைப் பற்றியெல்லாம் எடுத்துரைத்தான்.

"அம்மனுக்குப் பின்னலே சுரங்கப் படிகள் இருக்கின்றன. அவை எங்கு போகின்றனவென்று யாருக்குமே தெரியாது. ஆனால் திப்புசுல்தான் கோட்டையில் உள்ள குகைக்கும் இதற்கும் வழியுண்டு என்று எங்கள் பாட்டனார் சொல்லிக் கேட்டிருக்கிறேன்" என்றான் பூசாரி.

“நான் அங்கே இறங்கிப் பார்க்கலாமா?” என்று ஆவலோடு கேட்டான் தங்கமணி.


“ஐயோ வேண்டாம். அதற்குள்ளே கருவண்டுகள், பாம்புகள் எல்லாம் உண்டு” என்று பூசாரி சட்டென்று பதில் சொன்னான்.

“இந்தச் சுரங்க வழியில் தான் எங்கேயோ திப்புசுல்தான் புதையல் இருக்கிறதாமே?” என்று மேலும் கேட்டான் தங்கமணி.

“ஆமாம் – அதெல்லாம் ரொம்ப ரகசியம். காட்டு மாரியம்மன் அதற்குக் காவல் தெய்வம். அதனாலேதான் இந்த தேவதை சக்தியுள்ள தெய்வமாக இருக்கிறது” என்றான் பூசாரி.

பூசாரிக்கு அவன் எதிர்பார்த்ததற்கு மேல் தட்சிணை கொடுத்துவிட்டு எல்லாரும் பாட்டி வீட்டை நோக்கித் திரும்பினார்கள். ஜின்கா பூசாரி கொடுத்த வாழைப்பழத்தை இரண்டு கன்னத்திலும் அடக்கிக் கொண்டு புறப்பட்டது. பழம் கிடைத்ததுபற்றி அதற்கு அளவில்லாத மகிழ்ச்சி.

வரும்போதே இருட்டி விட்டது. நல்ல வேளை, சுந்தரம் தன்னுடைய டார்ச் விளக்கைக் கொண்டு வந்திருந்தான்.





# 8 சங்ககிரி மலை ஏற ஏற்பாடு!

இரவு படுக்கப்போகு முன்பு மூவரும் அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றிக் குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். குகையின் ரகசியப் பாதை எங்கு முடிகின்றதென்பதை முன்னதாகவே அறிந்து கொண்டது நல்லது என்றும் நினைத்தார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே சங்ககிரி மலைமேல் ஏறிப் பார்க்க முடிவு செய்தார்கள். அதற்கு வேண்டியவாறு தங்களுக்கு உண்டி வகைகளைத் தயாரித்துக் கொடுக்கும்படி கண்ணுப் பாட்டியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

“பாட்டி, காலை உணவை இங்கேயே முடித்துக்கொண்டு புறப்படுகிறோம். அதனால் மத்தியான உணவை மட்டும் செய்து கொடுங்கள்” என்று தங்கமணி கூறினான்.

“உங்களுக்குச் சிரமம் வேண்டாம் பாட்டி, நானும் சமையல் வேலையில் உங்களுக்கு உதவுகிறேன்” என்று கண்ணகி உற்சாகமாக முன் வந்தாள்.

“சரி, இனி எல்லாம் உப்புமயமாக இருக்கும் – கண்ணகி கை வைத்தால் அவ்வளவுதான்” என்றான் சுந்தரம்.

கண்ணுப் பாட்டி சிரித்தாள், “கண்ணகி கை



வைத்தால் எல்லாம் கல்கண்டாக இருக்கும். நாளைக்குப் பாருங்கள்." என்று அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"நானும் காய்கறி நறுக்கிக் கொடுக்கிறேன்" என்றான் தங்கமணி.

"உங்களுக்கு சிரமமே வேண்டாம். நானே எல்லாம் செய்கிறேன், சர்க்கரைப் பொங்கல், சாம்பார் சாதம், தயிர் சாதம்" என்று அடுக்கிக் கொண்டே போனாள் கண்ணுப்பாட்டி.

"ஜின்காவுக்கு வடை, வாழைப்பழம்" என்றான் சுந்தரம்.

இந்தக் கோமாளிக்குத்தான் வடையும் வாழைப்பழமும் – ஜின்காவின் பேரைச் சொல்லி இவன் சாப்பிடுவான்" என்று கண்ணகி கேலி செய்தாள்.

சுந்தரம் சிரித்துக் கொண்டான். பதில் பேசவில்லை.


"பாட்டி, அந்த வண்டிக்காரன் எங்களோடு வரவேண்டாம். நாங்கள் தனியாகவே எல்லாம் பார்த்து வருகிறோம்" என்று தங்கமணி கேட்டுக் கொண்டான்.

காலையில் இட்லி, தோசை, அடை எல்லாம் பாட்டி தயார் செய்து வைத்திருந்தாள். சாப்பிட்டதும் மலைக்குப் புறப்பட்டார்கள். வண்டிக்காரன், "நானும் வந்தால் உணவு மூட்டையை எடுத்துக் கொள்ள வசதியாக இருக்குமே" என்று, தலையைச் சொரிந்தான். இன்றும் நல்ல உணவு வகைகள் கிடைக்கும் என்று அவன் எதிர்பார்த்தானோ என்னவோ?

"இல்லை, அவர்களே போய்ப் பார்த்து வரட்டும். நீ வேண்டுமானால் தனியாக ஒரு நாளைக்குப் போய் வரலாம்" என்று கண்ணுப்பாட்டி கண்டிப்பாகக் கூறிவிட்டாள். அது அவனுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகவே இருந்தது.

தொடரும்...

# வாழ்த்துகிறோம்



முகப்பேர் திரு.கே.சி.பழனிசாமி அவர்களின் மகள் திருமண வரவேற்பில் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கலந்துகொண்டு வாழ்த்திய காட்சி!

தன்னம்பிக்கைத் தொடர்



## விழித்தெழு! முயன்றிடு!! வென்றிடு

# உழைப்பை விதையுங்கள்...

சிந்தனைக்கவிஞர் கவிதாசன்

வெற்றி என்பது நமது முயற்சிக்குச் சூட்டப்படுகிற மணிமகுடம். முயற்சி என்பது விதைப் போன்றது. அதை வீசிக் கொண்டே இருப்பவர்கள் தொடர்ந்து வென்று கொண்டே இருக்கிறார்கள். ஓய்வின்றி உழைப்பவர்கள் நிச்சயம் உன்னத நிலையை அடைந்தே தீர்வார்கள் என்பது உறுதி. ஆகவே உழைப்பை விதைத்துக் கொண்டே இருங்கள். வெற்றியின் விடியல் தொடரும்.



காலத்தையும் அதிர்ஸ்டத்தையும் குறை கூறிக் கொண்டு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு முழுமையாக உழைக்கத் தயங்குபவர்களுக்கு வெற்றியின் தரிசனம் ஒருபோதும் கிடைப்பதில்லை. வாழ்க்கை என்னும் பாதையில் மகிழ்ந்து பயணப்படுவதற்கும் வெற்றிக் கனிகளைச் சுவைப்பதற்கும் உழைப்பே உறுதுணை என்பதை உள்ளத்தில் உறுதியாக எழுதுங்கள். உழைப்பின் வேர்கள் கசப்பானவை என்றாலும் அதனால் கிடைக்கும் வெற்றியின் கனிகள் இனிப்பானவை.

திட்டமிட்டு உழைக்கும் போது திசைகள் தோறும் வெற்றி ஆம். ஒவ்வொரு தினத்தையும் முந்தைய நாள் இரவே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். அதாவது நேரத்திற்கு ஏற்ற வேலை;

வேலைக்கேற்ற நேரம் என காலத்தை ஒதுக்கிக் கொண்டு செயல்பட வேண்டும். செல்வத்தில் சிறந்த செல்வம் நேரம். மற்ற செல்வங்களை இழந்தால் திரும்பப் பெற முடியும், ஆனால் இழந்த நேரத்தை ஒருபோதும் திரும்பப் பெற முடியாது. இதைத்தான் எனது கவிதை ஒன்றில்...



நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று மட்டுமே கையில் உள்ள வீணை என்று குறிப்பிட்டுள்ளேன். ஆம்! ஒவ்வொரு நாளையும் விதைப்பு நாளாகவே கொண்டாடி வியர்வையில் குளிக்க வேண்டும். அதாவது தினந்தினம் நற்செயல்களை விதைத்துக் கொண்டே இருங்கள். எதிர்காலத்தில் நாளும் நாளும் வெற்றியை அறுவடை செய்து கொண்டே இருக்கலாம்.

மேலும் வெற்றி பெறுவதற்குத் தேவையான தகுதியை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆம்! தகுதி என்ற சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் நமது தகுதியை நிர்ணயம் செய்கிறது. இச்சொல்லில் உள்ள "த" என்பது தன்னம்பிக்கையையும், "கு" – என்பது குறிக்கோளையும், 'தி' – என்பது திறமையையும் குறிக்கும்.



ஆகவே தன்னம்பிக்கையுடன் குறிக்கோளை நோக்கி முயற்சிப்பதற்குத் தேவையான திறமைகளை வளர்த்துக் கொண்டும் தகுதியுடன் உழைத்துக் கொண்டே இருந்தால் நிச்சயம் தொடர் வெற்றியை அடைந்து கொண்டே இருக்கலாம்.

இலட்சிய சிகரத்தில் வெற்றிக் கொடி நாட்டுவதற்கு துணிச்சலுடன் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருங்கள். வெற்றி நிச்சயம் உங்கள் பக்கம் நிற்கும்.

இதுவரையில் ஒருவர் வெற்றியடைய வில்லை என்றால் வெற்றியடைவதற்கு அவர் தகுதியற்றவர் என்று அர்த்தமல்ல, அவருடைய முயற்சியும் உழைப்பும் போதவில்லை என்றுதான் அர்த்தம். தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி சூடு செய்கிறீர்கள், அது கொதிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்! சூடு போதவில்லை என்றுதானே அர்த்தம். நெருப்பின் ஆற்றலைக் கூட்டிச் சிறிது நேரம் காத்திருந்தால் அது கொதிக்க ஆரம்பித்து விடுமல்லவா? அதுபோலதான் வெற்றியும்.

அதுபோலதான் உரிய சூழ்நிலை உணர்ந்து உங்களுடைய உழைப்பை உயர்த்தினால் உறுதியாக உங்களால் வெல்ல முடியும். தோல்வியை கண்டு மனந்தளராமல் உழைப்பை விதைத்துக் கொண்டே இருங்கள். விரைவில் வெற்றியின் அறுவடையை நிகழ்த்தலாம்....

வெற்றி என்பது ஒரு விபத்தல்ல

அது வியர்வைத் துளிகளின் விளைச்சல்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



# மீண்டும் தமிழ்நாட்டிலிருந்து புதுடெல்லிக்கு....



## சி.பி.இராதாகிருஷ்ணன்

**மாண்புமிகு இந்திய துணைக் குடியரசுத் தலைவர்**

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், தெலுங்கானா மற்றும் புதுச்சேரியின் ஆளுநராகப் பணியாற்றி தற்போது நாட்டின் மாண்புமிகு துணை குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றுள்ள திரு.சி. பி. இராதாகிருஷ்ணன் அவர்களை சங்கத்தின் சார்பில் வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

திரு. சந்திராபுரம் பொன்னுசாமி ராதாகிருஷ்ணன், 20 அக்டோபர் 1957 இல், தமிழ்நாட்டின் திருப்பூரில் பிறந்தார்,

சி.கே.பொன்னுசாமி மற்றும் கே.ஜானகி ஆகியோரின் மகனாவார். கொங்கு வேளாளர் கவுண்டர் சமூகத்தில் பிறந்தவர். அவர் தமிழ்நாட்டின் தூத்துக்குடி வி.ஓ. சிதம்பரம் கல்லூரியில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை (பிபிஏ) பட்டம் பெற்றார். அவரது

கல்வி சாதனைகளுக்கு மேலதிகமாக, கல்லூரி அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டிகளில் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றவர். இளம் வயதிலேயே பல்வேறு வகையான விளையாட்டுகளில் ஆர்வம் செலுத்தினார்.

## திரு.சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களின் அரசியல் வாழ்க்கை

இளம் வயதிலேயே தேசியவாத கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தனது இளம் பருவத்தில் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தில் (ஆர்.எஸ்.எஸ்) சேர்ந்தார், பின்னர் 1974 இல் பாரதிய ஜன சங்கத்தின் ஒரு பகுதியாக ஆனார். பொது சேவை மற்றும் அடிமட்டப் பணிகளில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு அவரது அரசியல் பயணத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது.

ஆரம்பத்தில், 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மக்களவைத் தொகுதியில் இரண்டு முறை எம்.பி.யாக வெற்றி பெற்றதன் மூலம் இராதாகிருஷ்ணன் தேசிய அளவில் கவனத்தைப் பெற்றார். 1998 ஆம் ஆண்டு அவர் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கது. ஏனெனில், அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்த பிறகு, தமிழ்நாட்டில் வெற்றி பெற்ற மூன்று பாஜக வேட்பாளர்களில் அவரும் ஒருவர். இது மாநிலத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் மைல்கல்லாகும். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் ஜவுளித்துறை நிலைக்குழுவின் தலைவராக இருந்தார், மேலும் நிதி மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான குழுக்களில் பங்கேற்றார்.



2004 ஆம் ஆண்டில், அவர் ஐ.நா. பொதுச் சபைக்கான இந்திய சட்டமன்றக் குழுவில் உறுப்பினராகவும் இருந்தார், அங்கு அவர் பேரிடர் உதவி மற்றும் மனிதாபிமான ஒருங்கிணைப்பு பற்றிப் பேசினார். 2004 முதல் 2007 வரை பாஜகவின் மாநிலத் தலைவராகப் பணியாற்றியதன் மூலம் தமிழ்நாட்டில் தனது அரசியல் வாழ்க்கையை மேம்படுத்தினார். இந்த நேரத்தில், மாநிலம் முழுவதும் நதிநீர் இணைப்பு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 19,000 கிலோமீட்டர், 93 நாட்கள் "இரத யாத்திரை"யை மேற்கொண்டார்.

## ஆளுநராக இராதாகிருஷ்ணன்

பிப்ரவரி 2023 இல், பிரதமர் நரேந்திர மோடியால் திரு.இராதாகிருஷ்ணன் ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் பதவியேற்ற முதல் நான்கு மாதங்களில் 24 மாவட்டங்களுக்கும் சென்று உள்ளூர் தலைவர்கள் மற்றும் குடிமக்களுடன் கலந்துரையாடினார். ஜூலை 2024 இல் மகாராஷ்டிராவின் ஆளுநரானார். அதே நேரத்தில் அவர் தெலுங்கானாவின் ஆளுநராகவும், புதுச்சேரியின் துணைநிலை ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார்.

## துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்!

உடல்நலக் குறைகளை காரணம் காட்டி திரு. ஜக்தீப் தன்கர் திடீரென துணை ஜனாதிபதி பதவியில் இருந்து ராஜினாமா செய்ததால், நாடு துணை ஜனாதிபதி தேர்தலைச் சந்திக்க வேண்டியிருந்தது. செப்டம்பர் 9 அன்று நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் பி. சுதர்சன் ரெட்டியை 152 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து 452 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். திரு.சி.பி. இராதாகிருஷ்ணன் செப்டம்பர் 12, 2025 அன்று குடியரசு துணைத் தலைவராகப் பதவியேற்றார்.

மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களது பணி சிறக்க கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்

# வாழ்த்துகிறோம்



நமது சங்க செயற்குழு உறுப்பினர் திரு.சிவப்பிரகாசம் அவர்களின் மகள் திருமண வரவேற்பில் சங்கத்தின் முன்னாள் தலைவர் பரணி பாலசுப்பிரமணியம், இந்நாள் தலைவர் வீ.க. செல்வக்குமார், இணைச் செயலாளர் சி.அரவிந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்திய காட்சி!



சங்கத் தணிக்கையாளர் ஆர்.பாலசந்தர் அவர்களின் மகன் திருமண விழாவில் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் திரு.எஸ்.அருணாச்சலம், திரு.கே.ஆர்.அப்பாவு, திரு.வி.பி.செங்கோட்டுவேல், முன்னாள் துணைத் தலைவர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன், திரு.வி.பெருமாள் ஐ.பி.எஸ். ஆகியோருடன் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள்.



என்.டி.சி. குழுமத்தின் தலைவர் கொங்கு மாமணி கே.சந்திரமோகன் அவர்களின் புதல்வி திருமண வரவேற்பு விழாவில் சவீதா பல்கலை வேந்தர் டாக்டர் என்.எம். வீரையன், டாக்டர் இராஜகோபால் மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் பரணி கே. பாலசுப்பிரமணியம் ஆகியோருடன் சொந்தங்கள் வாழ்த்திய காட்சி!

## பிறந்த நாள்



# ப.சுப்பராயன்

செப்டம்பர் – 11

தமிழுக்கும்,
தமிழக மக்களுக்கும்
அளப்பரிய
சேவைகளை செய்த
சென்னை
மாகாணத்தின்
முன்னாள் முதல்வர்


## தமிழ்நாடு இலக்கியப் பேரவை

240A-C, நஞ்சுண்டாபுரம் பாதை, இராமநாதபுரம், கோவை–641036

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் –குறள்

முனைவர் **வே. குழந்தைசாமியின்**
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – வடித்த சிந்தையில் வார்த்த மொழிகள்
**நூல்கள் வெளியீட்டு விழா**

நாளும் நேரமும் : **20–09–2025 சனிக்கிழமை காலை 10.00 மணி**
இடம் : பொறியாளர் இல்லம், கோவை அரசு மருத்துவமனை எதிரில் இரயில்வே குடியிருப்பு அருகில்

அன்புடையீர் வணக்கம்.

நம் பேரவையின் 386–ஆம் திங்கள் கூட்டம் நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது. தாங்களும், தங்கள் நண்பர்களும் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்

இவ்விழாவிற்கு
அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் மேனாள் வேந்தர்
பேராசிரியர் முனைவர் **க. குழந்தைவேல்** அண்ணா அவர்கள்
சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நூல்களை வெளியிட உள்ளார்கள்

புலவர் **பொன்முடி சி. சுப்பையன்** அவர்கள்
தலைவர், தமிழ்நாடு இலக்கியப் பேரவை
தலைமையேற்க உள்ளார்கள்

முன்னிலை: விஜய் சண்முகம், புலவர் கி.ஆ. குப்புராசு, முனைவர் ஐ.கே.எஸ், பாவலர் சிவபாசுக்கரன், தமிழமுதம் அய்யாசாமி, அ. செந்தில்குமார், செ. கண்ணப்பன், வெ. வேல்முருகன், தமிழ் மாணிக்கம்,

புலவர் **பொன்முடி சுப்பையன்**
தலைவர் 92451 83831

**திரு. திராவிடமணி**
செயலர் 96003 55635

**இரா. பழனிசாமி**
பொருளாளர் 98942 10098

புலவர் **சோதிநாதன்**
துணைத் தலைவர் 99441 42560

**வே. செங்குட்டுவன்**
இணைச் செயலர் 97152 86796

இந்நிகழ்ச்சியின் உரைகளை தமிழ்நாடு இலக்கியப் பேரவை 386 யு டியூப்பில் பார்க்கலாம்

நாளொன்று மலரக் குறள் ஒன்று கற்போம்!


கவிதை



# தாழ்விலா வாழ்வு

நல்லவை நினைத்து
நல்லொழுக்கம் பேணி
நல்குரவு மதித்து
நல்குரவு மதிக்க
நல்லுறவு காத்து
நற்செயல் புரிந்து
குற்றம் களைந்து
குற்றம் கடிந்து
இல்லத்தில் இன்பமும்
உள்ளமதில் மகிழ்வுமாய்
கொண்டாடுவது கொண்டாடி
கொண்டாடுவோர் கொண்டாட
தன்மதிப்பு கூட்டி
தலைக்கனம் தவிர்த்து
தாழ்விலும் சோராது
வாழ்வதே வாழ்க்கை!
ஊர்மெச்ச ஒப்பனையிட்டு
உள்ளத்தில் கள்ளத்தோடு
வாழும்வகையில் நேர்மையின்றி
வாழ்வோரை உலகறியும்
முன்நின்று வணங்கினாலும்
பின்நின்று காரி உமிழும்!
தகவிலார் இச்சகம் தாழ்வு
தக்கார் வாழ்த்துவதே வாழ்வு!

–செ.அசோகன்



# விளையாட்டு விழா படங்கள் 2025











# விளையாட்டு விழா படங்கள்




























# பரிசு வென்ற பிள்ளைகள்














**வெற்றிப் பெற்ற**
**கண்மணிகளை**
**வாழ்த்தி மகிழ்கிறோம்!**










# வருந்துகிறோம்



சங்க உறுப்பினரும், உச்சநீதிமன்ற நீதிபதி திரு.எம்.எம்.சுந்தரேசன் அவர்களின் தந்தையும்,
மூத்த வழக்கறிஞருனான
திரு.**வி.கே.முத்துசாமி**
பி.ஏ.,பி.எல்., அவர்கள்
மறைவுற்றதற்கு சங்கம் தனது ஆழ்ந்த வருத்தங்களை தெரிவித்துக் கொள்கிறது.

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கொங்குநாடு அறக்கட்டளையின் அறங்காவலரும், அகவை 90 அடைந்தவருமான
பேராசிரியர்
**டாக்டர் எம்.ஏ. வேலுசாமி**
அவர்கள்

கோவையில் உள்ள அவரது இல்லத்தில் 16.09.2025 அன்று காலை இயற்கை எய்தினார். அவர் ஒரு சிறந்த சமுதாயப் பற்றாளர். நற்றமிழ் நாவலர். சென்னை ஐஐடியில் பணிபுரிந்த காலத்தில், அரசுப் பணியில் இருந்த பொழுதே சமுதாயப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு நமது சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்ற பெருமைக்குரியவர். அவரது மறைவிற்கு சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



மருத்துவம்



# சிறுநீரக நோய்களை தவிர்க்க



பத்மஸ்ரீ கொங்குமாமணி

**டாக்டர் வி.எஸ்.நடராஜன்**

முதியோர் நல மருத்துவர் சென்னை

நமது உடலை 'சுத்தமாக' வைத்திருக்கும் சிறுநீரகத்தை 'பத்திரமாக' பாதுகாப்பது நமது கடமை அல்லவா! அதற்கு இதோ சில எளிய வழி முறைகள்:

நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தக்க சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மருத்துவரின் ஆலோசனையின்றி வலி நிவாரணி மாத்திரைகளை தொடர்ந்து உண்ணுதல் கூடாது.

தண்ணீர் அதிகம் பருக வேண்டும். முதியவர்கள் ஒரு நாளைக்கு 2-3 லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும். முதுமையில் தாக உணர்ச்சி சற்று குறையும். தாகம் இல்லாமல் இருப்பினும், நிறைய தண்ணீர் அருந்த வேண்டும். இதய நோயாளிகள் மற்றும் சிறுநீரகத் தொல்லை உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி தண்ணீர் குடிக்கலாம்.

நமது உணவில் சராசரியாக 10 முதல் 15 கிராம் உப்பை சேர்த்துக் கொள்கிறோம். உலக சுகாதார நிறுவனம் உப்பின் அளவு ஒரு நாளைக்கு 5 கிராம் போதும் என்று அறிவித்துள்ளது. நமது உணவில் உப்பு அதிகமாகவே உள்ளது. நம்



# உலக இயன்முறை மருத்துவதினம்




"உலக இயன் முறை மருத்துவ தினத்தை" முன்னிட்டு, 8 - 09 -2025 அன்று சென்னை போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பத்மஸ்ரீ முதியோர் நல மருத்துவர் வி.எஸ். நடராஜன் அவர்கள் "வளமான முதுமை" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அங்கு கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கு, டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளையின் வெளியீடான "வலி தீர வழி" என்ற குறுநூலை இலவசமாக கொடுக்கப்பட்டது.



உணவில் உப்பின் அளவை பாதியாகக் குறைத்தாலே (அதாவது 4 5 கிராம் உப்பு) சிறுநீரகம் பல ஆண்டுகள் பழுதின்றி உழைக்கும். உப்பு அதிகம் உள்ள உணவுப் பொருட்களைத் தவிர்க்கலாம். உதாரணம்: ஊறுகாய், அப்பளம், வடகம், உப்பு அதிகம் உள்ள பிஸ்கெட், வெண்ணெய், சீஸ், இறைச்சி, சீப்ஸ், பாப்கார்ன்.

சிறுநீரில் நோய்த்தொற்று ஏற்பட்டால் தாமதிக்காமல் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.



சிறுநீர்த்தாரையில் அடைப்பு போன்ற தொல்லைகள் ஏதும் இருப்பின் (உதாரணம்: சிறுநீரகம் மற்றும் சிறுநீர்த்தாரையில் இருக்கும் கட்டிகள், கற்கள், பிராஸ்டேட் சுரப்பியின் வீக்கம்) அவை நாளடைவில் சிறுநீரகத்தை செயலிழக்கச்செய்யும். காலந்தாழ்த்தாமல் சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறவேண்டும்.

புகையிலையை நிறுத்தவேண்டும்.

மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை முழுஉடற் பரிசோதனை செய்யும் போது சிறுநீரகம் சார்ந்த பரிசோதனைகளை (ரத்தத்தில்யூரியா, க்ரியாடினின், சிறுநீரில்புரதம்) அவசியம் செய்து கொள்ள வேண்டும்.

கவிதை




வெளியசைக்கா நீர்ப்பரப்பு !
வான்நோக்கும் நேருவின்
தொப்பியாய் துடுப்பு படகு!

குட்டி நிலத் துண்டில் இலை
உதிர்த்த பெரு மரம் !

மர உச்சியில் மலர்ந்தார்
போல் பூரண நிலவு !

மரமமர்ந்த கொக்கின்இரை
தேடும் பறப்பின் துவக்கம் !

துரிசற்ற ஆடியின்
பிரதி பலிப்பாய்
நிழலுலகே நிஜவுலகாய் !

யுகங்கள் கண்ட அனுபவன்
இம்முது தரு!

புயல், மழை, வெம்மை
வறட்சியும் பருவங்களாக
வந்தன போயின!

ஆயின் தரு கொண்டது
மலை கலங்கினும்
நிலை கலங்கா மகாவீர
மௌனம்!

சண்டை, சச்சரவு, கைகலப்பு
பெரும்போர், ஊடுருவல்
தமை
மானிடம் விட்டொழிப்பின்
இவ்வையம் வானவரும்
தேடி வரும் மாற்று
சுவர்க்கமே!
வாழி நலம் சூழ்!

-கவிஞர் கலாப்ரியன் (பூபதி)




# வாழ்த்துகிறோம்



விளையன் குலத்தை சேர்ந்த வரும், ஈரோடு பள்ளிபாளையம் பல்லவா டெக்ஸ்டைல்ஸ் நிறு வனத்தின் செயல் இயக்குன ருமான திரு. துரை பழனிசாமி அவர்கள் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் (சைமா) புதிய தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். அவருக்கு சங்கத்தின் சார்பில் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கவிதை

# பழுத்த இலையும் வாடிய மலரும்



பழுத்த இலையும்
வாடிய மலரும்
முதிர்ந்தான் பிணமும்
புத்தனாக்கியது
சித்தார்த்தனை !
கௌதமன்
கலங்கரை விளக்கமானான்,!

நெருப்பாற்றின் மீது அமைந்த
மயிர் பாலத்தின்
மீதேகி வாடா அனிச்சம்
கொணர்க எனப் பணித்த விதி,
வாழ்வியலை கற்பித்தது எனக்கு !
கவித்திறனும் நல்கியது !

வாழ்வில் அடிபடா
மனிதன் எஞ்ஞான்றும்
பண்பட்டதில்லை ! சற்று
வாடாத பயிர் என்றும்
நிறைவிளைச்சல்
நல்கியதில்லை !
"வாழி நலம் சூழ!"

**அன்புடன்**
**- கலாப்ரியன்**
**(பூபதி)**




# சுதந்திர தின விழாக் காட்சிகள்

கொங்கு நண்பர்கள் சங்க வெள்ளி விழா இல்லத்தில் நடந்த 79-வது ஆண்டு சுதந்திர தின பெருவிழாவில் சங்க தலைவர் வீ.க.செல்வக்குமார் முன்னிலையில் செயலாளர் எம்.அமராபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். விழாவில் சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் விடுதி மாணவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினர்.









**Rooted in the legacy of Amma Nanna, I was inspired by the value of hardwork , trust and integrity . With a deep passion for jewelry, I founded Tiyaraa , a brand that blends timeless artistry with modern sophistication.**



இளங்கோ புகழ் போற்றி! இன்பத்தமிழ் வளர்ப்போம்!!


**சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை**

நடத்தும்

# சிலப்பதிகாரப் பெருவிழா

மற்றும்

## தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் 96–வது பிறந்தநாள் விழா



**செந்தமிழ் முழக்கம் நாளும் செழித்திட!**
**வாழ்க சிலம்பொலியார் புகழ்!**



பேரன்புடையீர் வணக்கம்!

திருவள்ளுவர் ஆண்டு 2056 செப்டம்பர் திங்கள் 21 (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.30 மணிமுதல் 8.00 மணிவரை "சிலப்பதிகாரப் பெருவிழா" மற்றும் சிலம்பொலி செல்லப்பனாரின் பிறந்தநாள் விழா சீர்மிகு முறையில் இனிதே நடைபெற உள்ளது.

இவ்விழாவில், 'இளங்கோ விருது' மற்றும் 'சிலம்பொலியார் மாணவர் விருது' வழங்கும் நிகழ்வு மிகச்சரியாக 5.30 மணியளவில் நாமக்கல், பரமத்தி சாலை **கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில்** நடைபெற இருக்கிறது.



"செந்தமிழ் போற்றுமின்
சிலம்புநலம் சாற்றுமின்
வாழ்மின் தமிழர் காள்
வாழ்மினோ தமிழ்பருக"

தமிழன்பர்கள் அனைவரையும்
பேரன்புடன் அழைக்கிறோம்.

21.09.2025, ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை
கொங்கு வேளாளர் திருமண மண்டபம்,
பரமத்தி சாலை, நாமக்கல்.

வரவேற்புரை
திரு. **பி.கே. வெங்கடாசலம்** அவர்கள்
தலைவர், கொங்கு நாட்டு வேளாளர் சங்கம், நாமக்கல்.

தலைமை
முனைவர் **பழனி ஜி. பெரியசாமி** அவர்கள்
தலைவர், பி ஜி பி குழுமம்

விருதாளர்கள் அறிமுக உரை
முனைவர் **கோபால. நாராயணமூர்த்தி** அவர்கள்
செயலாளர், நாமக்கல் தமிழ்ச் சங்கம்

**"இளங்கோ விருது"** மற்றும் **"ஐம்பதாயிரம் பொற்கிழி"** பெறுபவர்
பேராசிரியர். முனைவர் **சாந்தி கேசவன்** அவர்கள்
மேனாள் துறைத் தலைவர், இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

**"சிலம்பொலியார் மாணவர் விருது"** மற்றும்
**"பத்தாயிரம் பொற்கிழி"** பெறுபவர்
மாணவி **ரா. அபர்ணா,**
மூன்றாம் ஆண்டு, உயிரியல் மருத்துவ பொறியியல்
பாவை பொறியியல் கல்லூரி, நாமக்கல்.

வாழ்த்துரை
மரு. **இரா. குழந்தைவேல்** அவர்கள்
தலைவர், நாமக்கல் தமிழ்ச் சங்கம்
திரு. **வ. சத்தியமூர்த்தி** அவர்கள்
தலைவர், நாமக்கல் கம்பன் கழகம்

சிலப்பதிகார சிறப்புரை
திரு. **வி. வீரபாலாஜி** அவர்கள்
முனைவர் பட்ட ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி.

விழாப் பேருரை மற்றும் சிலம்பொலியார் புகழுரை
தமிழறிஞர் கலைமாமணி
திரு. **மரபின்மைந்தன் முத்தையா** அவர்கள்

நன்றியுரை
திரு. **செ. கொங்குவேள்** அவர்கள்
தலைவர், சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை

அழைப்பின் மகிழ்வில்....

கவிப்பேரருவி ஈரோடு **தமிழன்பன்**
தமிழறிஞர் **மறைமலை இலக்குவனார்**
கவிஞர் **பொன். செல்வகணபதி**
முனைவர் திருமதி **மணிமேகலை புட்பராசு**
திரு. **செ. கொங்குவேள்**
**சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை**

நிகழ்ச்சித் தொகுப்புரை : **தமிழன் ராகுல் காந்தி**

அழைப்பின் பெரு மகிழ்வில்....

நாமக்கல் தமிழ்ச் சங்கம்
நாமக்கல் கம்பன் கழகம்
அமிழ்தத்தமிழ் ஆய்வரங்கம்
நாமக்கல் கவியரசு கண்ணதாசன் கழகம்

பி.ஜி.பி. கல்வி நிறுவனங்கள்
கொங்குநாடு கல்வி நிறுவனங்கள்
பாவை கல்வி நிறுவனங்கள்
கொங்குநாட்டு வேளாளர் சங்கம்

நாமக்கல் கவிஞர் சிந்தனைப் பேரவை, சிலம்பொலியார் சிலைக்குழு
சிலம்பொலியாரின் சீர்மிகு மாணவர்கள்
மற்றும் **தகைசால் தமிழன்பர்கள்**

மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்** தமிழ்நாடு முதலமைச்சர்



தன்வாழ்நாள் முழுவதும் தமிழ்நாடு எங்கும் சுற்றிச்சுழன்று சிலப்பதிகாரத்தின் மாண்பையும் செந்தமிழின் மேன்மையையும் போற்றியவர் நமது சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள். நாமக்கல்லில் அவரின் சொந்த கிராமத்தில் சிலம்பொலி செல்லப்பனாரின் திருஉருவச் சிலையை நான் திறந்து வைத்தேன் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் கலைஞருக்கு தமிழ் இலக்கியத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு அவ்வப்போது நான் எனது நண்பர் சிலம்பொலி செல்லப்பனாரைத் தான் அழைத்து பேசுவேன் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டைப் பெற்றவர்தான் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள்.

கர்ம யோகி திரு. **டி.எம்.காளியண்ணன்**
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர், திருச்செங்கோடு



சிலம்பொலி செல்லப்பன் சிறந்த தமிழ் பேச்சாளர். ஐம்பெரும் காப்பியத்திலே சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் அலசி ஆராய்ந்து முத்தமிழை மக்களுக்குத் தெளிவுபடக் கூறி உள்ளார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே திருச்செங்கோட்டில் ஆண்டுதோறும் கண்ணகி விழா நடத்தி வந்தேன். அதற்கு மிக முக்கிய மூல காரணமானவர் செல்லப்பன் அவர்கள். தான் பிறந்த மண்ணை மறக்காத சீரிய பண்பாளர் சிலம்பொலி செல்லப்பன்..

அருட்செல்வர் பொள்ளாச்சி **நா. மகாலிங்கம்**



சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தொடாத இலக்கியமே இல்லை. தமிழில் சிறந்த புலமை உடையவர். பல அறிஞர்கள் அணுகத் தயங்கும் பெருங்கதை அவருக்கு தண்ணீர் பட்ட பாடம் எந்த இலக்கியத்தைப் பற்றி சொல்ல கேட்டுக் கொண்டாலும் தயங்காமல் எந்தக் குறிப்பும் கையில் வைத்துக் கொள்ளாமல் பேசக்கூடிய வல்லமை வாய்ந்தவர். எங்கள் இருவரிடையே நீண்ட கால நட்பு உண்டு. அவருடைய பண்பு நலன்கள் என்னை மிகவும் கவர்ந்தது. எல்லோரிடத்திலும் பணிவும், இன்சொல்லும், இன்முகமும் உடையவர் மிகவும் போற்றுதலுக்கு உரியவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள்.

மாலை 5.00 மணிக்கு தேநீர்
இரவு 8.00 மணிக்கு உணவு

# மணமகன் தேவை



| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : S.M. ஸ்வேதா |
| பிறந்த தேதி | : 18-12-1998, வெள்ளிக்கிழமை |
| பிறந்த நேரம், இடம் | : 12:31:00 PM, சேலம் |
| நட்சத்திரம், இராசி | : கேட்டை பாதம்-3, விருச்சிகம் |
| தந்தை பெயர் | : ராஜா (எ) மோகன்குமார் |
| தாயார் பெயர் | : விஜயா |
| குலம் | : பொருளீந்தான் குலம், |
| கோவில் | செல்லாண்டியம்மன் கோவில் -கருமாபுரம் |
| உடன்பிறந்தோர் | : தம்பி ஒருவர் மட்டும் |
| உயரம் | : 158 cm |
| படிப்பு | : B.F (Tech) Apparel Production |
| தந்தை தொழில் | : Shanthi Enterprises - Agricultural Implements,<br>Texmo Taro Pump Sets Dealer at Sankagiri |
| மாத வருமானம் | : 5 Lakhs |
| சொத்து மதிப்பு | : Rich & Affluent -Lands, Plots, Residential Flat.<br>Properties Value - Over Phone Call |
| உகந்த மணமகன் | : உகந்த, தகுதியான குடும்பத்திலிருந்து<br>சொந்த தொழில் செய்ய கூடிய மணமகன் |
| ஜாதக குறிப்பு | : செவ்வாய்,சுத்த ஜாதகம் இரண்டும் பொருந்தும் |
| தொடர்புக்கு | : 94432 63616, 97152 98247, 98427 98247 |

| | | | |
|---|---|---|---|
| 1-லக் | சனி(வ) | | |
| கேது குரு | ராசி | | |
| மாந் | | | ராகு |
| சூரி சுக் | சந் புத | | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | சூரிசனி(வ) ராகு மாந் | குரு | செவ் |
| சந் | நவாம்சம் | | |
| | | | சுக் 1-லக் |
| | | கேது புத | |

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம் நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 154 | R.சிரஞ்சீவி | செம்மன் | 20/06/1995 உத்திரட்டாதி | B.SC., Film Technology | Media Entertainment Company | Erode 5.31 P.M. | 98408 98710 |
| 155 | கலைசெல்வன் | செல்லன் | 25/12/1994 உத்திரம் | MCA | Software Infosys | Dharmapuri 8.10 A.M | 96269 97471, 96293 35657 |
| 156 | Dr.K.K.தருண் MDS | செல்லன் | 18/2/1998 சுவாதி | M.D.S. (Prostho) Final year | Studing | Gobi 1.43 A.M. | 99402 31358, 98408 53144 |
| 157 | R.அகிலேஷ்குமார் | செங்கண்ணன் | 28/11/1997 விசாகம் | MBA (HM) | Product Consultant Design | Pollachi 12.46 P.M. | 98459 62506, 89518 95429 |
| 158 | R.மூர்த்தி | செல்லன் | 22/10/1992 பூரம் | B.E.,(Civil) | Plan Engineer (Mark Technology Pvt Ltd) | Salem 2.56 P.M. | 94882 48026, 94451 00026 |
| 159 | Vishal | பயிரன் | 9/10/1998 ரோகிணி | B.E. (Mech), | R&D Assistant Manager (Mahindra pvt Ltd.) | Erode 5.35.P.M. | 97916 61879, 98410 26879 |
| 160 | K.நந்தகுமார் | தூரன் | 22/10/1995 அஸ்தம் | B.E. (CS) | Business (NK Enterprises) | Erode 2.56 P.M. | 95247 3555, 90952 65555 |
| 136 | K.Ashok Kumar | பனங்காடை | 25/6/1995 கார்த்திகை | M.E. | Senior Technical (Medical Devise) | salem 9.07 A.M. | 99523 02325 |
| 161 | K.நரேந்தர் | மணியன் | 27/6/1997 உத்திரட்டாதி | B.Tech, MBA (IIM) | Manager (Asian Paint) | Chennai 8.50 am | 98408 75023, 95000 38648 |

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 164 | K.கார்திகா | தூரன் | 3/10/1996, மிருக சீரிடம் | B.E. (Civil) | அரசுபணி AE (PWD) | நாமக்கல் 7.12 A.M. | 95976 08579 |
| 165 | E.பிரியதர்ஷினி | காடை | 28/12/1996 ஆயில்யம் | B.B.A.,L.L.B., | Legal Consultant | திருச்சிராப்பள்ளி 6.55A.M. | 94898 14348, 98424 59224 |
| 166 | S.ஆதிமிக்காவர்தனி | ஓதாளம் | 23/2/1998 உத்திராடம் | B.Com., (Hons) PGDAM | Freelancer | Erode 10.55 P.M. | 93459 996781, 98651 62458 |
| 167 | K.பிரியதர்ஷினி | காரி | 18/5/1997 உத்திரம் | B.Sc. Agri MA (Political) | Technical Assistant (தமிழ்நாடு வனத்துறை) | Salem 1.02 A.M. | 82484 08597 |
| 168 | C.ரேஷ்மா | பண்ணை | 8/3/1996 சித்திரை | B.Com., CA (Auditor) | Studying | Namakkal 7.50 P.M. | 91590 25282, 94433 55265 |
| 169 | R.S.சுபலட்சுமி | வாங்கல் பெருங்குடி | 27/6/1997 உத்திரட்டாதி | MS (USA) | Software Engineer (USA) | Karur 11.32P.M. | 98945 15360, 99948 19068 |

# மணமகன் தேவை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 170 | P.நவீனா, | கண்ணாங் | 30/8/1998 அனுஷம் | B.SC Maths | Studing (Bank Exam) | Salem 6.58 A.M. | 78688 64197, 63827 77346, 94423 36325 |
| 171 | V.வினிஷா | தனஞ்செயன் | 3/8/1996 ரேவதி | B.E.,M.S., | Bioinfomatics scientist | நாமக்கல் 11.13A.M. | 94447 27927, 94440 27927 |
| 172 | சுகன்யா | செல்லன் | 6/2/1989 அவிட்டம் | M.A.,B.Ed., | Teacher (Govt. Uthangari | Harur 3.40 P.M. | 74115 31129, 99942 82245 |
| 173 | Dr.ருத்ரா சேது | தூரன் | 4/12/1999 சுவாதி | M.B.B.S., | PG Studying | Palani 11.45 A.M. | 98410 63134, 99401 45333 |
| 174 | B.நந்தினி | விளையன் | 9/12/1996 அனுஷம் | M.B.B.S., MD | Doctor | Chennai 4.13 P.M. | 98404 36600 |
| 175 | N.அக்ஷ்யா | வெண்டுவன் | 19/8/1997 சதயம் | B.Com.,MBA., CMA (Auditor) | Auditor Ford (Chennai) | Karur 7.59 P.M. | 94452 23437, 94438 48187 |
| 176 | பூஜா | கண்ணன் | 10/9/1997 கேட்டை | B.L., | Government Judicial | Chennai 5.54 P.M. | 96980 14327 |
| 177 | R.A.நிரோஷா | தோடை | 1/4/2002 அனுஷம் | M.B.B.S. (final year) | Studying | உடுமலைப்பேட்டை 3.37 P.M. | 73583 61678, 98411 33138 |
| 178 | A.Amritha | செல்லன் | 25/1/2000 உத்திரம் | M.B.B.S | Assistant Surgeon | சேலம் 3.18 A.M. | 99949 81234, 63833 03334 |
| 179 | M.ஹரிணி | ஆந்தை | 30/11/1996 பூசம் | B.E.,M.S | Private Sector | Chennai 6.29 A.M. | 98407 05454, 98400 94669 |
| 180 | K.மினு | பண்ணை | 25/7/1996 விசாகம் | M.Com | Studying | Salem 1.05 P.M. | 74021 69606, 94869 36294 |
| 147 | R.ரம்யா | விழியன் | 11/2/1993 சித்திரை | B.E.,EEE | IT Software | Erode 7.09 P.M. | 99520 9234, 98650 92150 |
| 154 | K.சங்கவி | பனங்காடை | 9/6/1999 ரேவதி | M.Sc.,B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 A.M. | 99523 02325 |
| 181 | Madhumita | தேவந்தர் | 20/3/1997 ஆயில்யம் | M.B.B.S.,MD | Consultant Adithya Clinic | Erode 1.36 A.M. | 73733 24591 |
| 182 | B.அஸ்வத்தி | பிள்ளன் | 7/2/1997 சதயம் | B.E.,MS(Engg) | Software Engineer | நாமக்கல் 6.38 A.M. | 94446 9756, 94452 13422 |
| 183 | D.Abirami, | ஒழுக்க | 29/1/1997 அஸ்தம் | M.B.B.S., MD | Doctor | Chennai 11.41 P.M. | 99526 58939, 99657 29554 |





# சென்னை மெட்டெக்ஸ் லேப் பி.லிட்
# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

*Where Test Inspires Trust...*

**Registered Office : Jothi Complex, No.83, MKN Road, Guindy, Chennai - 600 032, Tamilnadu, India**

## Contact : 86869 74749 | 044 - 2232 3163 / 4217 9490

**ISO 17025:2017 NABL ACCREDITED** | **TESTING LABORATORY** | **WATER, FOOD PRODUCT AND ENVIRONMENTAL**



Stability Chamber



Water Activity Meter

Accreditations / Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589

fssai · एपीडा APEDA · MOFPI

Stability is the Capability Of a specific formulation in a particular container closure system to remain within its physical chemical, microbiological, toxicological,the rapeutic specifications at a defined storage condition stability is expressed in terms of shelf Life.

| S.No | Study | Storage condition | Minimum time |
|---|---|---|---|
| 1 | Accelerated | 40º C ± 2º C | 75 % RH ± 5% RH 6 months |
| 2 | Long Term | 30º C ± 2º C | 60 % RH ± 5% RH12 months |

- Physio-Chemical Testing
- Microbiological Testing
- Heavy Metals
- Toxin Analysis



www.mettexlab.com

**Sample Collection Centre :-**

**ERODE : 89398 72544 | 72990 59215 | COIMBATORE : 98410 53041 | PUDUCHERRY : 95512 50027**

**MUMBAI : 89398 72540 | BANGALORE : 89399 90282 | COONOOR : 89399 98324**

**REGD. NEWS PAPER /**

Posted at Egmore RMS/1 (Pattrika Chennai) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper: TNTAM/2016/69320 | Postal Reg No. TN/CH(C)/602/2025-2027
Date of Publication Second Week of every month

**Posted on:**




**அனுப்புதல்**
**சென்னை கொங்கு நண்பர்கள் மலர்**
**கொங்கு நண்பர்கள் சங்கம்**
**வெள்ளி விழா இல்லம்**
**எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி**
**முதல் தெரு, இராயப்பேட்டை,**
**சென்னை- 600 014.**

**பெறுநர்**